தலைப்பு 296 - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 296 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடார்ந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமை, நிதி செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க அனைத்து பொருண்மையான தன்மை தொடர்பாக உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் மீது எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக

கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது

உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் 7.7 உப பிரிவின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது காசு மற்றும் குறுக்குப் பதிவு ஆகிய இரண்டையும் கவனத்திற்கொண்டு நேர்முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டிய போதும், இலத்திரனியல் அனுமதிபத்திரங்களை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைரிக்கா தூதரகத்தின் கீழ் செயற்படும் EXBS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கியிருந்த கூட்டு பெறுமதி ரூபா 19,880,000 ஆன 20 மடிக் கணனிகள் (Lap Top) மற்றும் மென்பொருட்களில் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் வருமானமல்லாத பெறுவனவாக, முதலீட்டு யெற்பாடுகளினால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கையப்படுத்தும் செலவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.	இதற்காக மேலதிக நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	அரச கணக்குகள் வழிகாட்டியின் குறிப்பிடப்படும் அறிவுரை பிரகாரம் கணக்குகளை தயாரிக்க வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
ஏதேனும் குறிப்பிடப்பட்ட செயற்திட்டமொன்றில் நேரடியாக பயன்படுத்துவதற்காக பொருட்கள் மற்றும் உபகரணங்களாக வெளிநாட்டு மூலதன உதவி கிடைத்தால் அந்த உருப்படுகளிற்குரிய ஆவணங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அந்த மானியத்தின் ரூபா பெறுமதியை திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் ஐக்கிய அமெரிககா குடியரசு தூதுவர் அலுவலகத்தின் EXBS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மானியமாக கிடைத்திருந்த ஐ.அ.டொ. 62,303.86 பெறுமதியான 60 கணனிகள், இருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்த கணனிகளின் பெறுமதியை கணக்கீடு செய்ய நவடிக்கை எடுத்திருக்கவில்லை.	**EXBS** நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2024 ஒக்டோபர் மாதம் முதல் திணைக்களத்திற்கு மானியமாக கிடைத்த கணனிகளிற்குரியதாக **Property Transfer Agreement** கைச்சாத்திட்டதன் பின்னர் கணக்கீடு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதிஏற்பாடு கோர வேண்டும். தற்போது அந்த உடன்படிக்கையை கைச்சாத்திட நடவடிக்கை எடுத்துள்ளதால், விரைவில் நிதிஏற்பாட்டை பெற்று கணக்கீடு செய்ய நவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன்.	மானியத்தின் பெறுமதியை நிச்சயித்து கணக்கீடு செய்ய வேண்டும்.

2. ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்தும்

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
வருமான குறியீடு இலக்கம் 1001-03-00 இன் கீழ் அனுமதிப்பத்திர வருமானத்திற்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 2,900,000,000 தொகை ஆனதுடன் பின்னர் ஆரம்ப மதிப்பீடு ரூபா	வருமானம் சேகரிக்கும் அளவு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் எடுக்கப்படும் தீர்மானத்தின் மீது வருடாந்தம் விநியோகிக்கும் வர்த்தமானியின் பிரகாரம் தீர்மானிக்கப்படுவதுடன், அப் பெறுமானத்தை சரியாக	மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமானவரை சரியாக எதிர்வுகூறப்பட்ட தகவலகளின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட

3,100,000,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆண்டினுள் ரூபா 3,762,582,369 ஆன அனுமதிப்பதிர வருமானம் உழைத்திருந்த காரணத்தால் சரியான எதிர்கூறலிற்கு இணங்கி வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்ட்டது.	மதிப்பீடு செய்வது கடினமாகும். கடந்த ஆண்டுகளில் வருமானம் கிடைத்த போக்கு மற்றும் மாற்றப்பட உத்தேசித்த கொள்கைகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு மிகவும் நியாயமான மதிப்பீடொன்றை எதிர்வுகூற நடவடிக்கை எடுக்கப்படும்.	வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

3.2.1 மீண்டெழும் செலவினம்

	கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(அ)	மீளாய்வாண்டில் 16 மீண்டெழும் செலவின விடயங்களில் தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்து 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் இயலுமானவரை சரியாக செலவினங்களிற்காக நிதிஏற்பாட்டை கோருவதற்கு குறித்துக்கொண்டேன்.	மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமானவரை சரியாக எதிர்வுகூறப்பட்ட தகவலகளின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	நடைமுறை ஆண்டைப் போன்றே கடந்த ஆண்டிலும் ஆரம்ப மதிப்பீட்டின் 25 சதவீதத்திற்கு அன்னளவான தொகையொன்று நி.பி.66/69 கீழ் ஏனைய செலவின விடயங்களிற்கு நிதிஏற்பாடு மாற்றங்கள் உள்ளடக்கப்பட்ட காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைபாடுகளிற்காக (1201) ஒதுக்கப்ட்ட செலவின விடயத்தில் 49 சதவீதம் சேமிக்கப்ட்டிருந்தது.	எதிர்காலத்தில் இயலுமானவரை சரியாக செலவினங்களிற்காக நிதிஏற்பாட்டை கோருவதற்கு குறித்துக்கொண்டேன்.	மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமானவரை சரியாக எதிர்வுகூறப்பட்ட தகவலகளின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

3.2.2 மூலதன செலவினம்

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து.	பரிந்துரை.
மீளாய்வாண்டிற்கான 04 மூலதன செலவின விடயங்களில் தேறிய நிதிஏற்பாடுகளின் 32 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சளவில் நிதிஏற்பாடு சேமிக்கப்ட்டிருந்தது.	எதிர்காலத்தில் செலவின விடயங்களில் நிதிஏற்பாடு சரியாக எதிர்வுகூரவு செய்ய குறித்துக்கொண்டேன்.	செலவினமதிப்பிடு தயாரிக்கும் போது இயலுமானவாறு சரியாக எதிரிவுகூறு செய்யப்பட்ட தகவல்களின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

3.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	நி.பி. 371(2) ஆ பிரிவு	கட்டுநிதி வழங்குவதை பதவி நிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் மட்டுப்படுத்த வேண்டிய போதும் மீளாய்வாண்டில் கட்டிட வாடகை முற்பணமாக கட்டிட உரிமையாளருக்கு ரூபா 100,000 நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது	ஈ.றீ. ப்றொபடீஸ் நிறுவனத்திற்கு மின்சாரப் பாவனைக்குரியதாக ரூபா 100,000/- ஆன பிணை வைப்பு தொகையொன்றை ஒவ்வொறு ஆண்டு ஆரம்பத்திலும் வைப்பு செய்ய வேண்டியதுடன் அது திரும்ப செலுத்த வேண்டிய செலவொன்று ஆகையால் முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் ஆண்டு இறுதியில் எமது திணைக்களத்திடம் வழங்கியதன் பின்னர் தீர்பனவு மேற்கொள்ளப்படுவதால் அதற்காக 345 நாட்களான காலமொன்று கடந்துள்ளது. இது இதுவரை நிமித்த உப கட்டு நிதியாக வழங்கப்பட்டுள்ளதுடன் தொர்ச்சியான கட்டு நிதியாக சரிசெய்வதற்கு குறித்துக் கொண்டேன்.	நிதிப்பிரமாண ஏற்பாடுகளிற்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை			
	தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவுகள்	கடமையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய 3 ஆண்டு வரை பழைமையான	நிலுவை மீதியான ரூபா 182,692 தொகை 2024 திசெம்பர் 26 திகதி முதல் கடமையை விட்டுச்சென்ற ஊழியர் ஒருவரினது என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரை 2025.03.26 ஆம்	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளிற்கு இணங்கி நிலுவை கடன் மீதி தொடர்பாக செயற்பட வேண்டும்.

ரூபா 458,816 ஆன கடன் மீதி மற்றும் பணித்தடை செய்த உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய 1 ஆண்டு முதல் 3 ஆண்டு வரையான பழைய ரூபா 335,753 ஆன கடன் மீதிகள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணையாளர்களிடமிருந்து அல்லது மரபுரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திகதி மீண்டும் கடமையில் அமர்த்தி இடமாற்றம் செய்துள்ளதுடன் அந்த கடன் மீதியை புதிய நிறுவன தலைவரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. பணித் தடை செய்யப்பட்ட உத்தியோகத்தரின் கடன் தொகையை தீர்துக் கொள்வதற்கு இறுதி கட்டளையை அவரிற்கு அனுப்பியுள்ளதுடன் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பணித் தடை செய்யப்பட்ட மற்றும் பதவியை விட்டுச்சென்ற உத்தியோகத்தரினது கடன் மீதிகள் தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் பிணையாளர்களிடமிருந்து சம்பளத்தால் அறவிட்டு மாதாந்தம் இந்த திணக்களத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்படும்

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தூர நோக்கு மற்றும் செயற்பணி

கணக்காய்வு அவதானிப்பு.	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
1969 சனவரி 16 திகதிய இலக்கம் 01 கொண்ட எறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தினால் இஸ்தாபிக்கப்பட்ட திணைக்களத்தின் நோக்கம், தூர நோக்கு மற்றும் செயற்பணி பிரகாரம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதகமான தாக்கம் செலுத்தும் இறக்குமதி	பல்வேறு நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் மூலம் இறக்குமதி அல்லது ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் பண்டங்கள் தொடர்பாக மாத்திரம் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுவதுடன்,	1969 சனவரி 16 திகதிய இலக்கம் 1 கொண்ட எறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் திணைக்களத்தை இஸ்தாபிக்கப்பட்ட நோக்கம், தூர நோக்கு மற்றும்

மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய போதும் திணைக்களத்தை இஸ்தாபிக்கும் முக்கிய நோக்கம் அடையப்பெறும் விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான முறைமையொன்று அல்லது நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடல் பிரதான கடமையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	அந்த பண்டங்கள் இறக்குமதி அல்லது ஏற்றுமதி தொடர்பாக அரசு எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் பிரகாரம் குறித்த கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டியது அளவு ரீதியாகவா, தரத்தின் அடிப்படையிலா, ஏதேனும் காலப் பகுதிக்கு கீழாகவா எனும் விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றது. (உதா: அரிசி மற்றும் சோளம் இறக்குமதி கட்டுப்பாடு, வாகன இறக்குமதி (கட்டுப்பாடு) துறை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக இஸ்தாபிக்கப்பட்டுள்ள அரச நிறுவனத்தின் மூலம் வழங்கியுள்ள பரிந்துரை மீதும் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுவன் மூலம் அத்துறைக்குரிய பண்டங்களின் இறக்குமதி தொடர்பாக கட்டுப்பாட்டை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செயற்பணி பிரகாரம் பாதகமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துவதற்காக பொருத்தமான விஞ்ஞான ரீதியான முறைமையொன்றை தயாரிக்க வேண்டும்.

4.2 திணைக்களத்தின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்பு

கணக்காய்வு அவதானிப்பு.	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
நிறுவன கட்டுப்பாட்டிற்குரிய பிரமாணங்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை மற்றும் அப்பிரமாணங்களின் கீழாக இந்நாட்டின் பொருளாதாரத்தின் நன்மைக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதும் திணைக்களத்தின் பொறுப்பு மற்றும் பணிப்பொருப்பு ஒன்றாக குறிப்பிடப்பட்ட போதும் திணைக்களம் இறக்குமதி கட்டிப்பாட்டிற்குரிய நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபட்டிருந்ததுடன் ஏற்றுமதிக்குரிய எந்தவித பிரமாணங்களையும் வெளியிட்டதாக கணக்காய்வினால் அவதானிக்கப்படவில்லை.	ஏற்றுமதியை ஊக்குவிக்கும் அரசின் கொள்கையின் மீது செயற்பட்டு ஏற்றுமதிக் கட்டுப்பாடு தொடர்பாக கடினமான கட்டுப்பாடுகள் விதிப்பு செய்யப்படாததுடன், 2017.11.09 திகதிய இலக்கம் 2044/41 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் தற்போது ஏற்றுமதி தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு பேணிச் செல்லப்படுகின்றது. அந்த வர்த்தமானியை நாளாதுவரையாக்குவது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது.	திணைக்களம் இஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு உள்ளக வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 அரசாங்க கணக்குகள் மீதான செயற்குழு கட்டளைகளை செயற்படுத்துதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(அ)	இறக்குமதி அனுமதிப்பத்திரங்களில் உள்ளடங்கிய நிபந்தனைகளை மீறிய இறக்குமமதியாளர்களை பகிரங்கப்படுத்த மற்றும் அதற்கு மேலதிகமாக அவரகளுக்கு தண்டனை வழங்குவதற்காக முறைமையொன்றை தயாரித்து செயற்படுமாறு, அரச கணக்குகள் செயற் குழுவினால் வழங்ப்பட்டிருநத கட்டளையை செயற்படுத்தி இருக்கவில்லை.	இறக்குமதி அனுமதிப்பத்திரங்களில் உள்ளடங்கிய நிபந்தனைகளை மீறிய இறக்குமதியாளர்கள் இடமிருருந்து இலக்கம் 1953/28 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், சில இறக்குமதிகளை மீள் ஏற்றுமதி செய்வதற்கு கட்டளையிடுவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2024.05.17 திகதிய இலக்கம் 2384/35 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2025.01.31 திகதிய இலக்கம் 2421/44 திகதிய வர்த்மானிகள்). நிபந்தனைகள் மீறிய இறக்குமதியாளர்களை பகிரங்கப்படுத்துவதற்காக தேவையான சட்டம் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த சட்டத்தை அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுயுள்ளது.	அரச கணக்குகள் மீதான செயற் குழுவின் கட்டளைகளுக்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படும் பண்டங்களை ஒருங்கிணைந்த வகைப்பாட்டு இலக்கத்தின் (HS Codes) கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மேற்பார்வை செய்வதற்கு மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டிற்கு உட்பட வேண்டிய ஏனைய பண்டங்கள் தொடர்பாகவும் கண்டறிந்து பொருத்தமான பண்டங்கள் ஒருங்கிணைந்த வகைப்பாட்டு இலக்கத்தின் கீழ் இறக்குமதி கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த கணக்குகள் செயற்குழுவினால் வழங்கியிருந்த கட்டளையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக தேவையான கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம், எதிர்காலத்தில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பட்டு திணைக்களத்தின் கட்டுப்பட்டிற்கு உட்பட வேண்டிய மற்றும் கட்டுப்பாட்டிலிருந்து அகற்ற வேண்டிய ஒருங்கிணைந்த வகைப்பாட்டு இலக்கங்கள் இனங்காணப்படவுள்ளது.	அரச கணக்குகள் மீதான செயற் குழுவின் கட்டளைகளுக்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	வெகுமதி உத்தேச திட்டத்தின் கீழ் இறுக்குமதி செய்யப்பட்டிருந்த வாகனங்களின் உரிமையை மாற்றும் போது ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பது பற்றி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்புபட்டு விசாரணை செய்யுமாறு வழங்கியிருந்த கணக்குகள் செயற்குழு கட்டளை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	மோடார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்ததுடன், மோடார் வாகன போக்குவரத்து ஆணையாளரின் இலக்கம் DMT/HI/ICT/IMFO/03 மற்றும் 2024/05/08 திகதிய கடிதம் மூலம் அனுப்பிய 208 வாகனங்களின் தற்போதைய தரவுகளின் பிரகாரம் 24 வாகனங்களின் உரிமையை மாத்திரம் முதலாம் பதிவு திகதி முதல் 05 ஆண்டுகளை கடப்பதற்கு முன்னர் ஏனைய தரப்பினரிற்கு ஒப்படைத்துள்ளதாக அவதானிக்கப்ட்டது. அது தொடர்பாக மேலும் பரீட்சிப்பிற்காக 2024/11/05 திகதி இந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு சென்றதுடன், அங்கு குறித்த பரிசோதனைக்காக மேலும் காலம் தேவையென மற்றும் உரிய தகவல்களை எழுத்து மூலம் அறிக்கை இடுமாறு அறிவத்திருந்ததால், 2024/11/24 திகதிய கடிதம் மூலம் மற்றும் 2025/03/14 நினவூட்டல் கடிதம் மூலம், அந்த 24 வாகனங்களின் உரிமையை ஒப்படைப்பது அனுமதிப்பத்திர நிபந்தனைகள் பிரகாரம் செய்யப்படாதமைக்கு காரணங்கள் வினவப்பட்டது.	அரச கணக்குகள் மீதான செயற் குழுவின் கட்டளைகளுக்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக கணனி நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்தியுள்ளதால் திணைக்களத்தின் ஊழியர் தேவைப்பாடு தொடர்பாக மீள்மதிப்பீடொன்றை மேற்கொண்டு ஆளணியினர் தேவைபாட்டை இனங்காண்பது பொருத்துமானதாகும் என அவதானிக்கப்படுகிறது.	மீளாய்வாண்டின் போது இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக கணனி நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி இடைநடுவே மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பரிந்துரை பிரகாரம் மீண்டும் 6 மாதங்களில் மதிப்பீடொன்றை மேற்கொண்டு குறித்த ஆளணியினரை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	ஊமியர் தேவைபாடு தொடர்பாக விரைவில் மீளாய்வு செய்து ஆளணியினரை திருத்தம் செய்ய வேண்டும்.